பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 03 2026 SUNDAY 6.30 PM

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) தமிழகத்தின் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) தமிழ் மொழியின் பெருமையை பிரதமர் உலகெங்கும் கொண்டு செல்வதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3) கல்வித்துறையின் வளர்ச்சிக்காக எண்ணற்றத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4) திமுக அரசு விளம்பரத்தில் மட்டுமே கவனம் செலுத்துவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5) உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா — வெஸ்ட் இண்டீஸ் இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>>

தமிழகத்தின் வளர்ச்சியை உறுதி செய்வதற்காக மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மதுரையில் தமிழகத்தின் வளர்ச்சிக்கான 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்றத் திட்டங்களை தொடங்கிவைத்தோடு புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டி அவர் பேசினார்.

***(Sound Byte — Modi (1) — 41 Sec. )***

மாநிலத்தின் சாலை போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டப்பணிகளை தாம் இன்று தொடங்கிவைத்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

***(Sound Byte — Modi (2) — 60 Sec. )***

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மொரப்பூர், பொம்மிடி, ஸ்ரீவில்லிப்புத்தூர், சோழவந்தான், மணப்பாறை, பொள்ளாச்சி, காரைக்குடி மற்றும் திருவாரூர் ரயில் நிலையங்களையும் இன்று தாம் திறந்துவைத்ததாக பிரதமர் தெரிவித்தார்.

***(Sound Byte — Modi (3) — 49 Sec. )***

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழ் மொழியின் பெருமையை பிரதமர் திரு நரேந்திர மோடி உலகம் முழுவதும் கொண்டு செல்வதாக தெரிவித்தார்.

***(Sound Byte — L. Murugan — 43 Sec. )***

இதனைத்தொடர்ந்து, திருப்பரங்குன்றம் சென்ற பிரதமர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றினார்.

<<<<<<<>>>>>>>

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழகத்தில் பொதுத்தேர்வுகளை எழுதவுள்ள மாணவர்களுக்கு விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மகிழ்சியுடனும், பதற்றம் இன்றியும் தேர்வினை எழுத வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாநிலத்தில் **12**-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நாளையும், **10**-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு வரும் **11**-ஆம் தேதியும் தொடங்குகிறது.

<<<<<<<>>>>>>>

திமுக அரசு விளம்பரத்திற்காக செலவு செய்வதில்தான் கவனம் செலுத்துவதாக பிஜேபியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக பிரதமர் திரு நரேந்திர மோடி எண்ணற்றத் திட்டங்களை கொடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் அமைப்புச்செயலாளர் திரு தங்கமணி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் அஇஅதிமுக சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

தங்கள் கூட்டணி வலிமையானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் நலனுக்கு எதிராக திமுக அரசு செயல்படுவதாகவும் திரு தங்கமணி குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

மத்திய — மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டதால்தான் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசை எதிரியாக நினைத்து, திமுக அரசியல் செய்து வருவதாக குறை கூறினார்.

<<<<<<<>>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை 38 Sec. )***

<<<<<<<>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

வேலூரில் பாரம்பரிய விதைகள், மரபு காய்கறிகள் மற்றும் கிழங்குகள் கண்காட்சி திருவிழா நடைபெற்றது.

----------------

இஸ்ரேல் — ஈரான் பதற்றம் காரணமாக சென்னை விமான நிலையத்தில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு இயக்கப்படும் விமான சேவைகள் இரண்டாவது நாளாக இன்றும் பாதிக்கப்பட்டன.

------------------

தென்காசியில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயத்தில் மாசிமக பெருவிழா தேரோட்டம் இன்று நடைபெற்றது. ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா — வெஸ்ட் இண்டீஸ் இடையேயான ஆட்டம் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெற்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்ற கட்டாயத்தில் இரு அணிகளும் உள்ளன.

-----------

அல்பேனியா சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

மகளிர் **57** கிலோ எடைப்பிரிவில் **Neha Sangwan**-னும், **53** கிலோ எடைப்பிரிவில் **Meenakshi**-ம் இப்பதக்கங்களை வென்றனர்.

-----------

உலகக்கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்றுப் போட்டிக்கான இந்தியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima Tete** தலைமையிலான இந்த அணியில், **20** பேர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<<<<END>>>>>>>>**